இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 298 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 26 – செவ்வாய்க்கிழமை 09 ஜூன் 2026 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 298 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 26 - Tuesday 09 June 2026 - Chennai 10 Pages ₹ 5.00

## டெல்லியில் ராகுல், காங்கிரஸ் கட்சியை விமர்சனம் செய்து பல்வேறு கட்சியினர் சாலைகளில் பேனர்!

# ‘இந்தியா’ கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தை புறக்கணித்தது தி.மு.க.!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (08.06.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ஐ.யூ.எம்.எல். – அ.தி.மு.க. – காங்கிரஸ், வி.சி.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணைந்தனர். அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாநில சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

**புதுடெல்லி, ஜூன் 9 -**

**இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டத்தை தி.மு.க. புறக்கணித்த நிலையில், டெல்லியில், ராகுல்காந்தி, காங்கிரஸ் கட்சியை விமர்சனம் செய்து, தி.மு.க. சார்பில், பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன.**

**புதுடெல்லியில், இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தை தி.மு.க., ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்தன.**

புதுடெல்லியில் நடை பெறும் இந்தியா கூட்டணிக் கூட்டத்தை தி.மு.க. புறக்கணிக்கும் என்று ஏற்கனவே தலைமைக் கழகம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

அந்த அறிவிப்பில், டெல்லி “கான்ஸ்டிடியூஷன் கிளப்பில்” வருகின்ற ஜூன் 8ஆம் தேதி நடைபெறும் “இந்தியா” கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்திற்கு வருமாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.





திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நீட் தேர்வு, தொகுதி மறுசீரமைப்பு, அவசர அவசரமாகத் தேர்தல் நேரத்தில் திணிக்கப்பட்ட SIR, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள், ஒரே நாடு ஒரே தேர்தல், வக்பு சட்டம், FCRA சட்டத் திருத்தம் உள்ளிட்ட ஜனநாயகத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், மாநில உரிமைகளுக்கும் எதிரான அனைத்திற்கும் தொடக்கம் முதலே, முதல் அரசியல் இயக்கமாகத் துணிச்சலுடன் எதிர்த்து நின்றது. அதற்கான நடவடிக்கைகளை ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றத்திலும், ஆட்சியில் இருந்த நேரத்தில் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும், உரிய நேரத்தில் நீதிமன்றங்களிலும் எடுத்து வைத்து வாதாடியும், போராடியும் வந்திருக்கிறது.

“இந்தியா” கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மையச் சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் நாட்டு மக்களுக்கான முக்கியப் பிரச்சினைகளில் முதன்மைக் குரல் எழுப்பி வந்தார். இது இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளும் அக்கட்சிகளின் தலைவர்களும் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காயமுற்றிருக்கும் கழகத் தோழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், வருகின்ற ஜூன் 8ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் “இந்தியா” கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது.

இக்கூட்டத்தில் பங்கேற்காத அதேநேரத்தில் இந்தக் கூட்டத்தில் இடம்பெற்றுள்ள மற்ற கட்சிகள் முன்வைக்கும் நாட்டு நலனைப் பாதிக்கும் பிரச்சினைகளில், திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் குரல் கொடுக்கும் என்று குறிப்பிட்டிருந்தது.

இதனிடையே, டெல்லியின் பல்வேறு பகுதிகளில், ராகுல்காந்தியையும், காங்கிரஸ் கட்சியையும் விமர்சனம் செய்து, தி.மு.க. சார்பில், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் படத்துடன் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன. அதில், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, காங்கிரஸ் நம்மைச் சார்ந்து வளர்ந்து வந்தது என்றும், இன்று அவர்கள் நமது முதுகில் குத்திவிட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்களுக்குள்ளேயே சண்டையிடுபவர்கள், எப்படி ஒன்றிணைந்து போராடுவார்கள்? என்றும் பேனரில் எழுதப்பட்டுள்ளது.

மேலும், காங்கிரஸ் கட்சியை விமர்சித்து தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்துக்களும், சரத்பவார், மம்தா பானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோர் காங்கிரஸ் கட்சியை விமர்சித்து பேசிய பேச்சுக்களும், புதுடெல்லியில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்ட பேனர்களில் இடம்பெற்றுள்ளன.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# ஏராளமான இஸ்லாமியர்கள் கழகத்தில் இணைந்தனர்!

### காங்கிரஸ் - ஐ.யூ.எம்.எல். - அ.தி.மு.க. - வி.சி.க.விலிருந்து விலகல்!

**சென்னை, ஜூன் 9-**

**கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (8.6.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ஐ.யூ.எம்.எல். - அ.தி.மு.க. - காங்கிரஸ் உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த வாலாஜா ஒருங்கிணைப்பாளர்கள் ரிபாய், ஏ.எஸ்.இல்யாஸ், முகமது முபாரக், அக்பர் பர்ஷா, ஏ.பாஷா, இம்ரான் ஜலீல், அக்பர், மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் ஜகபர்சாதிக், வணிகர் அணி அமீர்பாபு காஜா- குமரி மாவட்டத்தைச் சேர்ந்த முகமது நிஜாம், அல்அமீன், முகமது சபீர், குளைச்சல் பகர்தீன்,

தொண்டர் அணி நசீர்ஷா, மாணவர் அணி மா.முகமது அஸ்கர், குளைச்சல் அப்துல்கரீம், அஜமல்கான், ஜகபர்சாதிக், முகமது சபீர், புதுமடம் ஹலீம், ரஷித்அலி, நிசார்அலி, ஹாரிஷ் அல்யாசின், முகமது அசாருதீன், முகமது பைசல், முகமது இம்தியாஸ், இஃபான்கான், ஹாபில்அல்யாசின், ஆசிக் அலி நஜிமுதீன், அகமது, அலாஹ்வாத்அமீர்பாஷா, சபீர் அகமது, இன்பராஜ், சபீர்அகமது, இன்பராஜ், சீர்காழி வெங்கடேஷ், முகமது பைசல், மருத்துவ மணி அஃபான் அகமது, ஷாகுல்இம்தியாஸ், முகமது நவீத், முகமது சலீம், அஜ்மல்அஹமது, முகமது ரியாஸ்-

**காங்கிரஸ் - அ.தி.மு.க. வி.சி.க.!**

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த புகாரிகாஜா, அமீர்பாபு காஜா, சீர்காழி வெங்கடேஷ், இராஜசேகர் - அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட மீனவர் அணி துணைச் செயலாளர் சாகுல்அமீத், சாகுல் அமீது - விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த குளைச்சல் அ.சித்திக், சந்தோஷ்குமார் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாநில சிறு பான்மையினர் நலஉரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

## அடுத்தவர் திட்டத்தில் வெட்கமின்றி ஸ்டிக்கர் ஒட்டுவதா?

# சொந்தமாக செயல்பட திராணியற்ற த.வெ.க. அரசு!

### தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

**சென்னை, ஜூன் 9-**

**அடுத்தவர் உழைப்பில் உருவான திட்டத்தில் வெட்கமில்லாமல் ஸ்டிக்கர் ஒட்டி குளிர் காயும் த.வெ.க. அரசே... சொந்தமாக ஒரு திட்டத்தைக் கொண்டுவரும் அளவுக்குக் கூட திராணி இல்லையா? என தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி எழுப்பியுள்ளது.**

தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ள அறிக்கையில், தி.மு.க. ஆட்சியின் உழைப்பில் உருவான திட்டங்களுக்கு “ஸ்டிக்கர்” ஒட்டுவதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருக்கும் த.வெ.க. அரசும், உண்மையை உரக்கச் சொல்லாமல் ஆளுங்கட்சியின் ஊதுகுழலாக மாறிவிட்ட சில ‘பச்சோந்தி’ ஊடகங்களும் மீண்டும் ஒருமுறை மக்கள் மன்றத்தில் வசமாகச் சிக்கிக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

பதிவுத்துறையில் காகிதமில்லா ஆவணப்பதிவு, நேரடி வருகையில்லா பதிவு, ஆன்லைன் வில்லங்கச் சான்று என 18 சேவைகளை உள்ளடக்கிய “ஸ்டார் 3.0” மென்பொருள் திட்டத்தை, முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதியே அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்துவிட்டதாக தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

இதற்கான செய்தித்தாள் மற்றும் ஊடக ஆதாரங்களையும் தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ளது. நிர்வாகம் என்றால் என்னவென்றே தெரியாமல் விழிபிதுங்கி நிற்கும் த.வெ.க. அரசும், அதன் ‘Toxic’ ஐ.டி. விங் போராளிகளும், இந்தத் திட்டத்தைத் தங்களது புதிய கண்டுபிடிப்பு போலவும், ‘வரலாற்றுச் சாதனை’ போலவும் கட்டமைக்க முயல்வது அப்பட்டமான திருட்டுத்தனம்! என்றும் குறிப்பிட்டுள்ளது. இவர்களைக் கேள்வி கேட்க துப்பற்ற சில ஊடகங்கள், ஆளுங்கட்சி வீசும் எலும்புத்துண்டுக்காக உண்மையை மறைத்து, தவெகவின் மலிவான பி.ஆர் (PR) ஏஜென்சிகளாகச் செயல்படுவது ஜனநாயகத்தின் சாபக்கேடு என்றும் தி.மு.க. ஐ.டி.விங் விமர்சித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் கடந்த 2000ஆம் ஆண்டு தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கி வைத்த ஸ்டார் திட்டத்தின் தொடர்ச்சியை, 2026ல் தி.மு.க. அரசு “ஸ்டார் 3.0” ஆக தரம் உயர்த்தியது. அடுத்தவர் உழைப்பில் உருவான திட்டத்தில் வெட்கமில்லாமல் ஸ்டிக்கர் ஒட்டி குளிர் காயும் த.வெ.க. அரசே... சொந்தமாக ஒரு திட்டத்தைக் கொண்டுவரும் அளவுக்குக் கூட உங்களுக்குத் திராணி இல்லையா? என்று தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி எழுப்பியுள்ளது.

ஊடகங்களை விலைக்கு வாங்கி ஊரை ஏமாற்றிவிடலாம் எனப் பகல் கனவு காணாதீர்கள்! புள்ளிவிவரங்களும், ஆதாரங்களும் உங்களின் போலி பிம்பத்தை சுக்குநூறாக உடைத்தெறியும்! என்றும் தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.